# என்னைத் தெரிகிறதா?

நான் எங்கும் இருக்கின்றேன்.
என்னை உங்களால் காணமுடியாது.
உங்கள் வீட்டுக கதவை அசைக்கின்றேன்
மரக் கிளைகளை ஒடிக்கின்றேன்.
வீதியில் புழுதியை வாரி இறைக்கின்றேன்.
வீட்டுக் கூரைகளைப் பிடுங்கி எறிகின்றேன்.
எரியும் விளக்கை அணைக்கின்றேன்.
கடலைப் பொங்கியெழச் செய்கின்றேன்.



நான் கெட்டவன் அல்லன்.
நன்மைகள் பலவும் செய்கின்றேன்.
நான் இல்லாவிட்டால் நீங்கள் யாருமே உயிர் வாழ முடியாது
எப்போதும் நீங்கள் என்னை உட்கொள்கின்றீர்கள்.
நான் அசுத்தம் அடைந்தால் நீங்கள் நோயாளர்கள் ஆகிவிடுவீர்கள்.
உங்கள் களைப்பைப் போக்குகின்றேன்.

உங்கள் ஆடைகளை உலர்த்துகின்றேன்.
நெருப்பை எரியச் செய்கின்றேன்.
உண்ண உணவும் பருக நீரும் தருகின்றேன்.

என்னை அசுத்தம் ஆக்காதீர்கள்.
அழுகிய பொருள்களை வெளியே வீசாதீர்கள்.
அசுத்த நீரைத் தேக்கி வைத்து நாற்றம் வரச் செய்யாதீர்கள்.
இறந்த பிராணிகளை வெளியில் வீசாதீர்கள்.
இவற்றால் நான் கெட்டு விடுவேன்.
நான் கெட்டால் தீங்கு உங்களுக்கே.

இப்போது நான் யார் என்று தெரிகின்றதா?



குறிப்பு:
- வாசிக்க வழிநடாத்துக.
- கிரகித்தல் வினாக்களை வழங்கி, விடை எழுத நெறிப்படுத்துக.
- காற்று, மழை, சந்திரன், சூரியன், வானம் போன்ற இயற்கை எதுக்கள் பற்றி வாசிக்க வசதிகள் செய்க.